உ

கணபதிதுணை.

சதுரகிரி

அறப்பளீசுரசதகம்.

அம்பலவாணக்கவிராயர்

பாடியது

இஃது,

மதுரை, புதுவை, தஞ்சை, சென்னை, என்னும் நகரங்களின் தமிழ்ப்பள்ளிக்கூடத் துபாத்தியாயர்கள் சொல்நலிந்தும், எழுத்துமிகுந்தும், பிறழ்ந்தும் இருப்பதைக்களைந்து சுத்தபாடமாக வழங்குவிக்கக் கேட்டுக்கொண்டபடி சென்னைத் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பிரஸிடென்ஸ்காலேஜ் என்னும் சகலகலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலமை நடாத்திய

தி. விசாகப்பெருமாளையரவர்கள்

பதிப்பித்தபிரதிக்கிணங்க

இஃது

மயிலம்,

சுப்பிரமணிய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903

சென்னை-ஆசாரப்பன்தெரு, 84. நெ.

உ

சிவமயம்.

அறப்பளீசுர சதகம்.

——)(O)(——

காப்பு-வெண்பா.

உம்பர்கோனெம்பெருமா னேங்கறப்பளீசுரன்மேற்
பைம்பொருள்சேருஞ்சதகம் பாடவே-யம்புவியோர்
ஆக்குந்துதிக்கையுளா னன்புடையார்க்கின்பருளிக்
காக்குந்துதிக்கையுளான் காப்பு.

உயிர் பிறப்பு.

கடலுலகில்வாழுமுயி ரெழுபிறப்பினுண்மிக்க காட்சிபெருநர சென்மமாய், கருதப்பிறத்தலரி ததினுமுயர்சாதியிற் கற்புவழிவருத லரிது, வடிவமுடனவயவங் குறையாதுபிழையாது வருதலதுதனினு மரிது, வந்தாலுமிதுபுண்ணிய மிதுபாவமென்றெண்ணி மாசில்வழிநி ற்றலரிது, நெடியதனவானாத லரித்தினிரக்கமுள நெஞ்சினோனாதரி து, நேசமுடனுன்பதத் தன்பனாய்வருதலிந் நீணிலத்ததினுமரிதாம், அடியவர்க்கமுதமே மோழைபூபதிபெற்ற வதிபனெமதருமைமத வேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவ னே, க

மனையாட்டி சிறப்பு.

சணவனுக்கினியளாய்க் மிர்துபாஷியாய்மிக்க கமலைநிக ரூபவதி யாய், காய்சினமிலாளுமாய் நோய்பழியிலாததோர் கால்வழியில்வந்த வளுமாய், மணமிக்கநாணமட மச்சம்பயிர்ப்பென்ன வருமினியமார்க் கவதியாய், மாமிமாற்கிதஞ்செய்பவளுமாய்வாசல் வருவிருந்தோம்பு பவளாய், இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தியென் பெயரிலாதவளுமாய், இரதியெனவேலீலை புரிபவளுமாய்பிறர்தமி ல்வழிசெலாதவளுமாய், அணிபிழையொருத்தியுண் டாயினவள்கற்பு டைய ளாகுமெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசது ரகிரிவள ரறப்பளீசுரதேவனே. உ

நன்மக்கட்பேறு,

தங்குலம்விளங்கிடப் பெரியோர்கள்செய்துவரு தருமங்கள்செ ய்துவரலும், தன்மைமிகுஞானங்கள் செய்தாலுங்கனயோக சாதக னெனப்படுதலும், மங்குதலிலாணதன் தந்தைதாய்குருமொழி மாறு

துவழிபாடுசெய்தலும், வழிவழிவருந்தமது தேவதாபத்திபுரி மார்க்கமுந்தீர்க்காயுளும், இங்கிதகுணங்களும் விந்தையும்பத்தியு மீகையுஞ்சன்மார்க்கமும், இவையெலாமுடையவன் புதல்வனுமவனே யென்றவன்புண்யவானும், அங்கசவிசீராதியே சோதியேநீதியே ரரசமெமதருமைமதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫

சகோதரரொருமை,

கூடப்பிறந்தவர்க்கெய்துதுயர் தமதுதுயர் கொள்சுகங்கள் சுகமெனக்,கொண்டுதாந்தேடுபொருளவர்தேடுபொருளவாகொள்கோதில் புகழ்தம்புகழெனத், தேடுற்றவர்நிந்தை தந்நிந்தைதந்தவந் தீதிலவர்தவமாமெனச், சிவனென் றுடல்வே றிவர்க்கென்னவைந்தலைச் சிறரவமணிவாய்தொறும், கூடுற்றவிரையெடுத் தோடருணிறைந்திடுங் கொள்கைபோற்பிரிவின்றியே, கூடிவாழ்பவர்தம்மை யேசகோதரரெனக் கூறுவதுவேதருமமாம், ஆடிச்சிவந்தசெந்தாமரைப்பாதனே யண்ணலெம தருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௬

சற்குருவியல்பு.

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார விவரவிஞ்ஞானபூர்ண, வித்யா விசேஷசற் குணசத்ப சம்பன்ன வீரவைராக் கியர், சாதாரணப்பிரிய யோகமாக் காதிக்ய சமாதிநிஷ்டானு பவராய்ச், சட்சமயநிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர தருமமும் பரசமயமும், நீதியி னுணர்ந்து தத்துவமார்க்கராய்ப் பிரமநிலைகண்டு பாசமிலராய், நித்தியானந்தசை தன்யரா யாசையுறுநெறியுளோர் சற் குரவராம், ஆதாரமாயுயிர்க்குயிராகி யெவையுமா யமலவெம தருமை மதவேள், அனுதினமுமனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. ௭

நன்மாணாக்கரியல்பு,

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசீறி மாறுதிகழ்ந்தாலுமோ, மனதுசற்றாகிலுங் கோணாது நாணாது மாதாபிதாவெனக்குப், பொய்யாம னிமென்று கனிவொடும் பணிவிடை புரிந்துபொருடலாவியும், புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல் போற்றிமலரடியில் வீழ்ந்து, மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற விரும்புவோர் சற்சீடராம், வினைவேரறும்படி யவர்க்கருள் செய்திடுவதே மிக்கதேசிரதுகடன், ஐயாபுரமபொடிபடச் செய்தசெம்மலே யண்ணலெமதருமை மதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, ௮

பொருள்செயல் வகை.

புண்ணியவசத்தினாற்செல்வமதுவரவேண்டும்பொருளைரட்சிக்கவேண்டும்,புத்தியுடனதுவொன் றுநூறாகவேசெய்து போதவும்வளர்க்

கவேண்டும், உண்ணவேண்டும்பின்பு நல்லவத்ராயமாண முடவிற்றரிக்கவேண்டும் உற்றபெரியோர்கவிஞா தமராதுலர்க்குதவியோங்குபுகழ்தேடவேண்டும், மண்ணில்வெகுதருமங்கள் செயவேண்டுமுயர்மோக்ஷவழி தேடவேண்டுமன்றி, வறிதிற் புதைத்துவைத் தியாதபேர்களே மார்க்கமறியாக் குருடராம், அண்ணலேகங்கா குலத்தலைவன் மோனழகரு மழகனெம தருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. எ

தீவழி விலக்கு.

வஞ்சகர்தமைக்கூடி மருவொணா தன்பிலார் வாசலிற்செல்லொணாது, வாதெவரிடத்திலும் புரியொணா தறிவிலா மடையர்முன் வாய்திறக்கொணாது, கொஞ்சமேனுந்தீதுசெய்யொணா தொருவர்மேற் குற்றஞ்சொலவொணா தயற், கோதையர்களோடு பரிகாசஞ்செய்யொணாது கோளுரைகளைப்பேசொணாது நஞ்சுசருபமொடும் பழகொணா திருள்வழி நடந்துதனியேகொணாது, நதிபெருக்காயினு நீஞ்சல்செய்யொணாது நல்வழிமறக்கொணாது, அஞ்சாமலரசர்முன் பேசொணாதிவையெலா மறியுமெம தருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, அ

ஒன்றற்கொன் றழகுசெய்வன.

வாழ்மனைதனக்கழகு குலமங்கை குலமங்கை வாழ்வினுக்கழகு சிறுவர், வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகு மாநிலந்துதிசெய்குணமாம், சூழ்குணமதற்கழகு பேரறிவு பேரறிவு தோன்றிடிலதற்கழகுதான், தூயதவமேன்மை யுபகாரம்விரதமபொறுமை சொல்லரியபெரியோர்களைத், தாழ்தல்பணிவிடைபுரிதல் சிவநேசங்கருணை சாற்றுமிவையா மென்பர்காண், சௌரிமலரோனமரர் முனிவர்முச்சுடரெலாஞ் சரணமெனமரட்சியெனவே, ஆழ்கடலுதித்துவரு விடமுண்டகண்டனே யண்ணலெம தருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. கூ

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவிலில்லாதவூர் நாசியில்லாமுகங் கொழுநனில்லாதமடவார், குணமதில்லாவித்தை மணமதில்லாதமலர் குஞ்சரமிலாதசேனை, காவலில்லாதபயிர் பாலரில்லாதமனை கதிர்மதியிலாதவானம், கவிஞரில்லாதசபை சுதியிலாதபண் காவலரிலாததேசம், ஈவதில்லாததன நியமமில்லாதசெப மிசைலவணமில்லாதவூண், இச்சையில்லாதபெண் போகநலமிவைதப்பி னேதுபலனுண்டுகண்டாய், ஆவியனையாட்கிடந் தந்தவாகற்பதருவாகுமெம தருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰

ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை.

ஈகதனையில்லாத லோபியரிடத்திலே பொருளையருளிச்செய்தனை, புண்ணியஞ்செய்கின்ற சற்சனரிடத்திலே பொல்லாதமிடிவைத்தனை, நீதியகண்மூடர்க் கருந்ததியெனத்தக்க நெறிமாதரைத்தந்தனை, நிதானமுளவுத்தமர்க் கிங்கிதமிலாதகொடு நீலியைச்சேர்வித்தனை, சாதியிலுயர்ந்தபே ரீனர்பின்னேசென்று தாழ்ந்துபரவச்செய்தனை, தமிழருமையறியாத புல்லர்மேற்கவிவாணர் தாம்பாடவேசெய்தனை, ஆதரவிலாமலிப் படிசெய்ததென்சொலா யமலவெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௧

குணக்கேடரியல்பு.

மாறுதகலைகற்று நிலைபெற்றசபையிலே வாயிலாதவனொருபதர், வாள்பிடித்தெதிரிவரி னோடிப்பதுங்கிடு மனக்கோழை தானொருபதர், ஏறுவழக்குரைத் தனைவருஞ்சீசியென் றிகழநிற்பானொருபதர், இல்லாள்புறஞ்செலச் சம்மதித்தவளோ டிணங்கிவாழ்பவனொருபதர், வேறொருவர்மெச்சாது தன்னையே தான்மெச்சி வீண்பேசுவானொருபதர், வேசையர்களாசைகொண் டுள்ளளவுமனையாளை விட்டுவிடுவானொருபதர், ஆறுததுயரையும் மிடியையுந்தீர்த்தருள்செ யமலவெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௨

செய்யத்தக்கவை.

வாலிபந்தனில்வித்தை கற்கவேண்டுங்கற்ற வழியிலேநிற்கவேண்டும், விளைகடற்றிரிந்துபொருடேடவேண்டுந்தேடி வளரறஞ்செய்யவேண்டும், சீலமுடையோர்களைச் சேரவேண்டும்பிரிதல் செய்யாதிருக்கவேண்டும், செந்தமிழ்ப்பாடல்பல கொள்ளவேண்டுங்கொண்டு தியாகங்கொடுக்கவேண்டும், ஞாலமிசைபலதரும நாட்டவேண்டும்நாட்டி நன்றாய்நடத்தவேண்டும், நம்பனிணையடிபூசை பண்ணவேண்டும்பண்ணி னாலுமதிபத்திவேண்டும், ஆலமமர்கண்டனே பூதியணிமுண்டனே யனகவெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௩

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிரவாது சீவனஞ்செய்பவன் சாமர்த்யமுளபுருஷனும், சந்ததம்பதின்மரைக் காப்பாற்றுவோன்மிக்க தரணிபுகழ் தருதேவனும், பொன்மட்டிலாமலீந் தொருநூறுபேரைப் புரப்பவன் பொருவிலிந்த்ரன், புவிமீதிலாயிரம் பேர்தமைக்காப்பாற்று புண்யவானேபிரமனும், நன்மைதருபதினாயிரம்பேர் தமைக்காத்துரட்சிப்பவன் செங்கண்மால், நாளுமவன்மேலதிக மாகவெகுபேர்க்குதவு நரனேமகாதேவனும், அன்மட்டுவார்குழலி பாகனேயேகனே யண்ணலெம தருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௪

செயற் கருஞ்செயல்.

நீர்மேனடக்கலா மெட்டியுந்தின்னலா நெருப்பைநீர் போற்செய்யலாம், கொடியபெருவேங்கையைக் கட்டியேசழுவலா நீளரவினைப் பூணலாம், பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப் பட்சமுடனே யுண்ணலாம், பாணமொடு குண்டுவி லகச்செய்யலா மரப்பாவை பேசப் பண்ணலாம், ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு மெடுக்கலாம் புத்தி சற்றும், இல்லாத மூடர்தம் மனதைத் திருப்பவேயெவருக்கு முடியாது காண், ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவு மமலனே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. ௧௫

உத்தம ராவோர்.

செய்நன்றி மறவாத பேர்களும் மொருவர்செய் தீமையை மறந்தபேரும், திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற் சித்தம் வையாதபேரும், கைகண்டெடுத்த பொருள் கொண்டுபோய் பொருளாளர் கையிற் கொடுத்தபேரும், காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி காத்தருள் செய்கின்ற பேரும், பொய்யென்று கோடி வரினும் வழக்கழிவுபுகலாத நிலைகொள்பேரும், புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும் பொய்மை யுரையாதபேரும், ஐயவிங்கிவரெலாஞ் சற்புருஷ ரென்றுலகி லகமகிழ்வ ரருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. ௧௬

இதுவுமது.

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கு மவனே மகாபுருஷனும், அஞ்சாம லெதுவரினு மெதுபோகினுஞ் சித்த மசைவிலான் மகாதீரனும், தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாதுசெய்கின்ற தோன்றலே மகாராஜனும், தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத துரையே மகாமேருவாம், அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த்திரட்சிக்கு மவனே மகாத்யாகியாம், அவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயு மவனே மகாவுசிதனும். அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே யமலனே யருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே. ௧௭

ஒன்றிலொன் றில்லாமை.

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை கயவர்க்கு மேன்மையில்லை, கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார கன்னியர்க் காணையில்லை, தாமெனு மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு ஜாதிகுல மென்பதில்லை, தாட்சணிய முடையபேர்க் கிகலில்லை யெங்குமொரு சார்பிலார்க் கிடமதில்லை, பூமிக்கு ளீயாத லோபர்க்குவளமான புகழென்ப தொன்று மில்லை, புலையர்க்கு நிகமில்லை கைப்பொருளிலாததோர் புருஷருக் கொன்றுமில்லை, யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே யன்புடைய வருமைமதவேள், அனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே. ௧௮

யாக்கைநிலையாமை முதலியவை.

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தரும் காட்டி லாற்றின் பெருக்காம், கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெலாங் கானல்காட் டும்பர வாகம், மேயபுஜ பலவலிமை யிளமையழ கிவையெலாம் வெயின்மஞ்ச ளுயிர்தானுமே, வெட்டவெளி தனில்வைத்த தீபமெனவேகருதி வீண்பொழுது போக்காமலே, நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தி னினைவுவைத் திருபோதிலும், நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க நிமலனேயருள்புரிகுவாய், ஆயுமறி வாளர்பணி பாதனே போதனே யண்ணலெம தருமை மதவேள், அனுதினமுமன தினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

திருமங்கை யிருப்பிடம்.

நற்பரி முகத்திலே பன்னவ ரிடத்திலே நாகரிகர் மாமனையிலே, நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே நறைகொண்ட பைந்துளவிலே, கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே கல்யாண வாயிறனிலே, கடிநக ரிடத்திலே நற்சென்னல் விளைவிலே கதிர்பெறு விளக்கதனிலே, பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே பொய்யாத பேர்பாவிலே, பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே போதகத் தின்சிரசிலே, அற்பெருங் கோதைமலர் மங்கைவாழிடமென்ப ரண்ணலெம தருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. ௨௰

மூதேவி யிருப்பிடம்.

மிதமின்றி யன்னம் புசிப்போ ரிடத்திலு மிகுபாஷையோரிடத்தும், மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியு மிக்கபாதகரிடத்தும், கதியொன்று மிலர்போல மலினங் கொளும் பழைய கந்தையணி வோரிடத்தும், கடிநா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத கன்னிவாழ் மனையகத்தும், ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ் சார்ந்தவாட் டின்றிரளிலும், சாம்பிணமுகத்திலு மிவையெலாங் கவலைபுரி தௌவைவா ழிடமென்பர் காண், அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரு மழகனெம தருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. ௨௧

குறைகுண மிரண்டினும் பயன்படாமை.

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன குட்டநோய் கொண்டுமென்ன, குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது கொஞ்சமாய்ப் போகிலென்ன, மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன மலராது போகிலென்ன, மதுரமில் லாவுவர்க் கடனீர்கறுத்தென்ன மாவெண்மை யாகிலென்ன, உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா துலர்ந்துதான் போகிலென்ன, உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன வொங்குமிடி வரிலென்னகாண், அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே யாதியே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. ௨௨

குறைவுற்றுங்குணங்கொடாமை.

தறிபட்டசந்தனக் கட்டை பழுதாயினுஞ் சார்மணம் பழுதாகுமோ, தக்கபால்சுவறிடக் காய்ச்சினும்மதுகொண்டு சாரமதுரங்குறையுமோ, திறைபட்ட கதிர்மணி யழுக்கடைந்தாலுமதி னீள்குணமழுங்கியிடுமோ, நெருப்பிடையுருக்கினு மடிக்கினுந்தங்கத்தி னிறையுமாற்றுக்குறையுமோ, கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு மதுகொண்டு கதிர்மதிகனம் போகுமோ, கற்றபெரியோர்மகிமை யற்பரழிகிலரேனுங் காசினிதனிற்போகுமோ, அறிவுற்றபேரைவிட்டகலாதமூர்த்தியே யையனேயருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. உ௩

இதற்குதவிசெய்வது இதுவெனல்.

வானவர்பிதிர்க்கண்முச் சுவர்மூவர்கோள்கட்கும் வாழ்வுதருமுதவிபுவனம், வளமிக்கபுவனந்தனக்குமேல் மேலுதவிவாழ்வு பெற்றிடுமன்னராம், தேனமநறுந்தொடையல்புனை மன்னவர்க்குதவிசேர்ந்த குடிபடைவர்க்கமாம், சேர்குடிபடைக்குதவி விளைபயிர்க்குதவி சீர்பெறவழங்கு மழையாம், மேனிமாமழைக்குதவி மடமாதர்கற்பென்று வேந்தர்தந்நீதியொன்று, வேதியரொழுக்கமென்றிம்மூன்றுமேயென்று மிக்கபெரியோருரைசெய்வார், ஆனமர்நெடுங்கொடியுயர்ந்தவெம்மிறைவனே யதிபனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள் ரறப்பளீசுர தேவனே. உ௪

இதனைக்கண்டுமகிழ்வது இதுவெனல்.

தந்தைதாய்மலர்முகங்கண்டு·கின்றுலிப்பதவர் தந்தசந்ததியதாம், சந்திரோதயங்கண்டு பூரிப்பதுயர்வரவி தங்குபைங்குமுதமலராம், புந்திமகிழ்வாயிரவி வருதல்கண்டகமகிழ்வ பொங்குதாமரைமலர்களாம், போதவும்புயல்கண்டு கண்களித்தே நடம்புரிவதும் யூரவினமாம், சிந்தைமகிழ்வாயுதவு தாதாவினைக்கண்டு சீர்பெறுதிரவலர் குழாம், திகழ்நீதமன்னரைக் கண்டுகளிகூர்வதிச் செகமெலாமன்பர்கண்டாய், அநதியம்வானனைய செஞ்சடாடவியனே யமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. உ௫

அதுவதுவாகாமை.

உள்ளன்பிலாதபேர் தித்திக்கவேபேசி யுறவாடு முறவுமுறவோ, உபசரித்தன்புடன் பழிமாரிடர்சோறுண்டவர்க்கன்னமாமோ, தள்ளாதிருந்துகொண்டொருவர்போய்ப் பார்த்துவருதக்கபயிர்பயிராகுமோ, தளகர்த்தனொருவனில்லாமன்முன் சென்றிடுந் தானையுந்தானையாமோ, விள்ளாதபோகமில்லாதபெண் மேல்வருவிருப்பமும்விருப்பமாமோ, வெகுகடன்பட்டபேர் செய்கின்ற சீவனமு மிக்கசீவனமாகுமோ, அள்ளாதிருங்கருணையானனேதேவர்தொழுமாதியே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. உ௬

மூடர்தாரதம்மியம்.

பெண்புத்திகேட்கின்ற மூடருந்தந்தைதாய் பிழைபுறஞ் சொலுமூடரும், பெரியோர்கள்சபையிலே முகடேறிவந்து பிதற்றிடும் பெருமூடரும், பண்புற்றசுற்றஞ் சிரிக்கவேயிழிவான பழிதொழில் செய்திடுமூடரும், பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய் பரதவித்திடுமூடரும், கண்கெட்டமாடென்ன வோர்டியிரவலர்மீதுகாய்ந்துவிழ்ந்திடுமூடரும். கற்றறிவிலாதமுழு மூடருக் கிவரெலாங்காண் மூடரைமூடர்காண், அண்கற்றநாவலர்க் காகவே தூதுபோ மையனே யருமைமதவேள். அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௫

இதற்கு இதுவேண்டுமெனல்.

தனக்குவெகுபுத்தியுண் டாகினும் வேறொருவர் தம்புத்திகேட்கவேண்டும் தானதிகசூரனே யாகினுங்கூடவே தளசேகரங்கள்வேண்டும், கனக்கின்றவித்துவா னாகினுந் தன்னினுங் கற்றோரை நத்தவேண்டும், காசினியையொருகுடையி லாண்டாலும்வாசலிற் கருத்துள்ளமந்திரிவேண்டும், தொனிக்கின்றசங்கீத சாமர்த்தியனாகினுஞ் சுதிகூட்டவொருவன்வேண்டும், சுடர்விளக்காயினுந்நன்றாய்விளக்கிடத் தூண்டுகோலொன்றுவேண்டும், அனந்தகண்ணனேபடிக சங்கநிகர்வண்ணனே யையனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௬

வறுமையின்கொடுமை,

மேலானசாதியி லுதித்தாலுமதிலென்ன வெகுவித்தை கற்றுமென்ன, மிக்கவதிரூபமொடு சற்குண மிருந்தென்ன மிகுமானியாகிலென்ன, பாலான மொழியுடைய னாயென்னவாசார பரனாயிருந்துமென்ன, பார்மீதுவீரமொடு ஞானவானா யென்ன பாக்கிய மிலாதபோது, வாலாயமாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள் வந்தசுற்றமுமிகழுமே, மரியாதையில்லாமலனைவரும்பேசுவார், மனைவியுந்தூறுசொல்வாள், ஆலாலமுண்டகனி நேயனேயனகனே யையனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

ஈனத்துவம்

இரப்பவன்புவிமீதி லீனனவனுக் கில்லை யென்னுமவ னவனிலீனன், ஈகின்றபோதம்மை யீயாமலேகலைத் திடுமூடனவனி லீனன், உரைக்கின்றபேச்சிலே பலனுண் டெனக்காட்டி யுதவிடானவனி லீனன், உதவவேவாக்குரைத் தில்லையென்றே சொல்லு முலுத்தனோ வனிலீனன், பரக்கின்றயாசகர்க்காசைவார்த்தைகள் சொலிப் பலகாலலைந்துதிரியப், பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே பாரிலெல்லோர்க்குமீனன், அரக்கிதழ்க்குமுதவா யுமைநேசனே யெளியரமுதனே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௮

மறைப்பனவும் வெளிப்படுத்துதனவும்.

செனமித்தவருஷமும் முண்டான வத்தமுந் தீநல் கிரகச்சாரமும், தின் றுவருமௌஷதமுமே லான தேசிகன் செப்பியமகாமந்தரமும், புன்மை யவமானமுந் தானமும் பைம்பொனணி புனையுமடவார் கல்வியும், புகழ்மேவு மானமும் மிவை யொனபதுந்தனது புந்திக்குளே வைப்பதே, தனமமென் றுரைசெய்வ ரொன்றுசருக்கையுந் தன்பிணியையும்பசியையும், தான்செய்தபாவமும் மிவையெலாம்வெளிருவர் தஞ்செவியில்வைப்ப தியல்பாம், அருமருவுகண்டனே மூன்றுலகுமீன்றவுமை யன்பனே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள றப்பளீசுரதேவனே. ௩௯

தேவர்கள் காலவளவை.

சதுர்யுகமோரிரண் டாயிரம்பிற்படிற் சதுர்முகர்கொருதினமதாம், சாற்றுமித்தினமொன்றிலேயிந்திரபட்டங்க டாமும்மீரேழ்சென்றிடும், மதிமலியுமித்தொகையி சயனுயு ணீறுபோய் மாண்ட போதொருகற்பமாம், மாறிவருகற்பமொரு கோடிசென்றுநெடிய மால்தனக் கோர்தினமதாம், துதபரவுமித்தொகையி லொருகோடிநெடியமால் தோன்றிபோ போய்மறைந்தான், தோகையோர்பாகனே நீனகைத்தணிமுடி துலக்கிடுங்காலமென்பார், அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட் கரசனேயருமை மதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௪௰

தூய்மையிடமும் தூய்மைசெய்வனமும்

வாம்பரிதனக்கதிக புனிதமுக மதனிலே மறையவர்க்குயர்புனிதமோ, மலரடியிலேபுனித மொலிகொள கன்றுடிக்கு மாசினூற்புறமதனிலே, மேம்படும்பசுவினுக் குப்பிற்புறததிலே மிக்க மடமாதருக்கோ, மேனியெல்லாம்புனித மாகுமா சௌசமொடு மேவுவணிதையர் தமக்கும், தாபமிறமதற்குமிகு வெள்ளிவெண்கலமயந் தங்கமீயந்தமக்கும், தரும்புனிதம் வழி பெருக் கொடுபுளி சுணஞ்சாம்பல் சாருமண்தாதுசாணம், ஆம்புனிதமிவையென்பர் மாமேருவில்லியையனகனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. ௪௧

அடங்காதவற்றை யடக்குமுபாயம்.

கொடியபொலியெருதையிரு மூக்கிலுங்கயிறென்று கோர்த்துவசவிர்த்திகொள்வார், குவலயந்தன்னின்மலக் களிறதனையங்குசங் கொண்டுவசவிர்த்திகொள்வார், படியில் விஷவரவமைந் திரதந்திரத்தினற் பற்றிவசருர்த்திகொள்வார், பாய்பரியைநெடியகடி வாளமதுகொடுநடை பழக்கிவசவிர்ததிகொள்வார், விடமுடையதுஷ்டரை சோர்ந்ததுகைக்கொண்டு விசவசவிர்த்தி செய்வார், மிக்கபெரியோர் களுபகோபத்தையறிவால் விலக்கிவசவிர்த்திகொள்வார், அடியவர்துதிக்குவரு செந்தாமரைப்பதத்தையனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௪௨

ஒளியினுயர்வு.

செழுமணிக் கொளியதனை மட்டிலையதினுமோ செய்பகத்தோனாகுமெனவே செப்பிடுங்கிரணத்திச் சமொளியதனினுந் தீபத்தினொளியதிகமாம், பழுதிலாத்தீவட்டி தீபத்தினதிகமாப்பகல்வத்தியதனினதிகமாம். பாரமத்தாப்பினொளி யதிலதிகமதிலுமோ மணிமதிக்கொளியதிகமாம், விழைவுதருபரிதிக்கு மனுநீதிமன்னர்க்கும் வீரவிதரணிகருக்கும், மிக்கவொளி திசைதோறும் போய்விளங்கிடு மென்னவிராகுமோராருரைசெப்புவார், அழல்விழிகொடேறிசெய்துமதவேடனை வென்றவண்ணலைப்பருமைமதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௪௩

குணங்கூற்றமாறல்.

வான்மதியைநோக்கிடிற் சோரர்காமுகர்க்கு மாறுதவல்விஷமதாம், மகிழ்நன்றனைக்காணி விதவிலாவிபசரிய மாதருக்கோவிஷமதாம மேனைமைதருநற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக மிக்கபேர்க்கதிகவிஷமாம், வித்தியாதியர் தமைக் கண்டபோதறிவிலாப வீணர்க்கெலாம்விஷமதாம், சனமிகுபுன்கவிவலோர்க்கதிகசபைகாணி லேலாதகொடியவிஷமாம், ஏற்றமில்லாதபடி பாவிநட்சரமென்னி மென்நாளுமதிகவிஷமாம், ஆனதவயோகியர்க ளிதயதாமறையுறையு மண்ணலையருமை மதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசு தேவனே. ௪௪

உயர்வன்றித்தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுமானமாகிலும் மலமானமாகிலுமேன் மையோர் செய்யிலழகாம், விரகமேயாகிலுஞ் சரசமேயாகிலும் விழைமங்கைசெய்யிலழகாம், தருதாழ்வுவாழ்வெரு தருமங்களைச்செபது சாலிலோபேரழகதாம், சரீரத்திலோருனமானவாகிலுஞ் சமர்செய்து வரிலழகதாம் நதமேவுமதகரியிலேறினுந் தவழினுமாருமதமேவுமழகதாம், நாய்மீதிலேறினும் விழினுங்கண்டபேர் நகைசெய்தழுகென்பர்காண் அக்மாபுநற்றவர்க் கருள்புரியுமையனே யாதியே யருமைமதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே, ௪௫

நல்வினை செய்தோர்.

சரணெனக்காத்தவன்செய்யினல் தென்றவன்றுனமிளையாதுகவிதோன். தந்தைசொன்மாறுதவன் முன்னவர்க்கானவன் றுய்பழிதுடைத்தநெடியோன், வருபிதுர்க்குதவினேன் றெய்வமேதுணையென்று மைந்தன்மனைவியை வதைத்தோன், மாறுனதந்தையைத்தமையனைப்பிழைகண்டு மாய்த்துலகின்மகிமைபெற்றோர், தருதரிய சிவியரிச்சந்திரன் மாபலி கணிச்சியோன் சுமுத்திரைசுதன், கருடன் பகிரதனுடன் சிறுத்தொண்டனேடு கானவன் பிரகலாதனன், அரியவல்விபீஷண-னெனுமகாபுருஷராமத்தனை யருமைமதவேள் அனுதினமுமனதினினைமதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே, ௪௬

தீவினைசெய்தோர்.

மாவிகழ்வு பேசிமிரு வான்விழுந்தோன் சிவனை வைதுநன்றிலை போயினன், மற்றொருவா காரத்தி லிச்சைவைத்துடலெல்லா மாறுத லவேவாயினான், தாயத்தினோர்க்குள்ள பங்கைக்கொடாமலே சம்பத் திழந்து மாய்ந்தோன், தக்கபெரியோர்தமை வணங்காமதத்தினாற் றந்திவடிவாயலைந்தோன், மாயனைச்சபைதனிலிகழ்ந்தனை செய்துகொள்கொ ண்ட மணிமுடிதுணிந்து மாய்ந்தான், வருங்குடிகெடுக்க வையிராவ ணன்குருடன் மகன்வழுதி சிசுபாலனும், ஆபுமதிவாளரொடு தேவர் பணிதாளனே யவணிபுகழருமை மதவேள அறுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௪௭

நன்னகர்

வாவிபல கூபமுடனாறாருசேர்வதாய் மலைகாதவழியிலுள்ளதாய், வாழைகமுகொடுதெங்கு பயிராவதாய்ச் செந்நெல் வயல்கள்வாய்க்கா ல்களுளதாய், காவிகவலங்குவளை சேரேரியுள்ளதாய் கலைவாய்த்தக ர்கள் மறைவலோர், காணரிய பல்குடிக ணிறைவுள்ளதாய் நல்ல காவலனிருக்கையுளதாய்த், தேவராலயமாடல் பாடலணி மாளிகை சிறக்கவுளதாய்ச் சற்சனர், சேறுமிட மாகுமோ ருர்கிடைத்ததிலதி க சிவனமுமே கிடைத்தால் ஆவலோடங்கிடுவ தேசொர்க்கவாச மென்றரையரை மருமைமகவேள் அறுதினமு மனதினினை தருசது ரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

தீநகர்

ஈனசாதிகள் குடியிருப்பதாய் முள்வேலி யில்லில்லினுக்கு முள தாய் இல்லைமலை நிறைந்துதன் றலைவிரித்திடாத பெண்குருட மட்டமு ளதாய்க் கானமொரு பக்கமாய் மலையோரமாய் முறைத் காய்சசறப் பாதவிடமாய்க், கள்ளர்பயமாய்நெடிய கயிறிட்டிறைக்கின்ற கேணி நீருண்பதாய் மானமில்லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற மணிய மொன்றுண் டானதாய், மாநிலத்தோர்தல மிருந்ததனி லேகுவாழ் வு வாழ்வதிலு மருநரகிலே, ஆனநெடுநாள்கிடந் தமிழ்தலே சுகமா கு மமலனேயருமைமதவேள், அறுதினமுமனதினினை தருசதுரகிரி வளரறப்பளீசுரதேவனே. ௪௯

முழுக்குநாள்.

வருமாதிவாரந் தலைக்கெண்ணெ யாகாது வடிவமிகு மழகுபோ கும், வளர் திங்களுக்ககிக பொருள்சேய மங்கார வாரந்தனக்கிடர் வரும், திருமேவு புதனுக்கு மிகுபுத்திவந்திடுஞ் செம்பொன்னுக்கு யராயுபோம், தேடியபொருட் சேதமாம்வெள்ளிசனிபெண்ணைசெல் ல்வமுண் டாயுளுண்டாம், பரிகாரமுளதாகி வாரந்தனக்கலரி பௌ மனுக்கான செழுமண், பச்சறுகுபொன்னைதற்கா மொருததுவோ ளிப் பார்க்கவற்கங்குமெனவே அறிதாவறிந்தபெரண்ணெய்ச் சே ர்த்தே முழுக்காடுவாரருமை மதவேள் அறுதினமு மனதினினை தரு சதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫௰

மருத்துவன்.

தாதுபரீக்ஷைவரு காலதேசத்தோடு சரிலட்சண மறிந்து, த
வந்தரிகும்பமுனியோர் கொங்கணர்சித்தர் தமதுவாடகமறிந்து, மே
குப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரப் பிரயோகமோடு பஸ்பம்
பிழைபாது மண்டூர செந்தூரலட்சணம் பேர்பெறுங் குணவர்கடப
சோதித்துமூலிகாவிற கெண்டுங்கண்டு தூயதைலம்லேகியம், சொ
பக்குவங்கண்டு வருரோக நிண்ணயந் தோற்றியே யமிர்தகரமாய் ஆ
திப்பெருங்கேள்வியுடையனுயுயர்வேத னுகுமெமதருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே.

உண்மையுணர்குறி.

சோதிடம்பொய்யாது மெய்யென்ப தறிவரிய சூழ்கிரகணஞ்ச
ட்சியாம் சொற்பெரிய வாகடம் நிசமென்பதைபேதி தருதூயமாத்தி
ரைசாட்சியாம், ஆதியிற்செய்ததவ முண்டில்லை யென்பதற் காளு
மையே சாட்சியாம், அரிதேவ தேவனென் பதையறிய முதநூலரி
சுவடியேசாட்சியாம், நாதனை மாதேவ னென்பதற்கொருத்தர நமச்
சமகனுசாட்சியாம், நாயேனை ரட்சிப்பதுன்பார மரியயனுருமார்ச்சனை
செய் சரணத், தாதிநாயகமிக்க வேதநாயகனை வண்ணலே யருமை
மதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதே
வனே.

பிறவிக்குணமாருமை.

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ்ஞானமும் கல்வியுங்கருணை
னவும், கருதரியவடிவமும் போசமுந்தியாகமுங் கனரூபமுளமங்கை
யும், அலங்காரவீரமும் பொறுமையும் தந்திரமு மாண்மையு மமு
மொழியும் ஆணவிச் செயலெலாஞ் சனன வாசனையினு லாகிவரு
ன்றிலைமேல், நலஞ்சேறு மொருவரைப் பார்த்துபெறக் கருதி
ண்ணுமோ ரஸ்தாளித, நற்சுவை தனக்குவர வேம்புதவமே நெடி
நாள் செயினும் வாருதுகாண், அலங்காரமாக மலர் கொன்றைமல்
கை சூடு மண்ணலே யருமைமதவேள், அனுதினமு மனதிநினை த
சதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. ௬

ஊழ்வலி

கடலளவுறைத்திடுவ ரரிபிரம ருருவங் காணும்படிக் குறை
ய்வார், காசினியினளவுபிர மாணமதுசொல்லுவார் காயத்தினிலை
யறிவார் விடலறியசீவனிலை காட்டுவார்மூச்சையும் விடாமற் றடுத்
டக்கி, மென்மேலும் யோகசா தனைவிளைப்பாரெட்டி விண்மீதினுர
வுவார், தொடர்வரிய பிரமநிலை காட்டுவாரெண்வகைத் தொகையா
சித்தி யறிவார், சூழ்வினைவரும் பொழுது சிக்கியுழல் வாரது
டைக்கவொரு நானகுமகமும் அடைவலவெனத் தெரிநதளவில் ப
நூல்சொல்லுமண்ணலே யருமைமதவேள் அனுதினமு மனதினி
தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௬

ஒப்புயர்வில்லாமை.

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக மேருவுக்கதிகமலையும், வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக மேதினியிலோடு நதியும், சோதிதரு மாதவர்க் கதிகமாங் காந்தியுஞ் சூழ்கனற் கதிக சுசியும், தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ் சுருதிக் குயர்ந்த கலையும், ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுநக ரன்னதா னந்தனிலுமோ, அதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலா மாராய்ந்தயே ருரை செய்வார். ஆதவன் பிரமன் விண்ணவர் முனிவர் பரவவருமண்ணலே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. ௫௫

வீண்செயல்.

வேட்டகஞ்சேர்வோரும் வீணரேவீணுரை விரும்புவோரவரின் வீணர், விருந்துகண்டில்லா டனக்கஞ்சி யோடிமறை விரகிலோ ரவரின்வீணர், நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே நாடியவர் மேற்கவிசொல்வார், நானிலந்தனில்வீண ரவரினும்வீணரே நரரைச்சுமக்குமெளியோர், தேட்டறிவி லாதபெருவீணரே யவரினுஞ் சேரொருவருத்துமின்றிச் செலவுசெய்வோ, திகவீணராம் வீணாய்த்திரியுமெளியேனை யாட்கொண், டாட்டஞ்செயும்பாதம்புய முடியின்மேல்வைத்த வமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫௬

உதவியின்றிக்கெடுவன.

மூப்பொருவரில்லாத குமரிகுடிவாழ்க்கையு மூதரணிலாதநகரும், மொழியும்வெகுநாயகஞ் சேரிடமும்வருமெதுகை மோனையில்லாக்கவியும், காப்பமை விலாததோர் நந்தவனமும்நல்ல கரையிலாநிறையேரியும், கசடறக்கற்காத வித்தையும் முபதேச காரணனிலாததெளிவும், கொப்புளவிஞ்ஞைமுடை யோரருகுபுகழாத கோதையாசெய்கூத்தாட்டமும், குளிர்புனனிறைந்துவரு மாற்றோரமதினின்று கோடியர்ந் தோங்குதருவும், ஆப்பதில்லாததே ரிவையெலா மொன்றுருகுமையனே யருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫௭

இவையே போதுமெனல்.

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர் பூவலஞ்செயவேண்டுமோ, பொல்லாத கொலைகளவிலாதநன் னெறியுளோர் புகழறஞ் செயவேண்டுமோ, நையாத காமத்தை லோபத்தை விட்டபேர் நல்லறஞ் செயவேண்டுமோ, நன்மனஞ் சுத்தியுண் டானபேர் மேலுமொரு நதிபடிந்திடவேண்டுமோ, மெய்யாவின்னடியாரைப் பரவுவோருன்பதம் விரும்பிவழி படவேண்டுமோ, வேதியர்தமைப்பூசை பண்ணுவோர் வானவரை வேண்டியர்ச்சனைசெய்வரோ, ஐயாறுடன்கமலைசோணாசலந்தில்லை யதிபனேயருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫௮

மணக்கோலத்திற்கு மாதம்.

சித்திரைத் திங்கடனின் மணக்கோல மணபுகச் செல்வமுண் டாகுனலமே, சேருமவைகாசிக்கு மேனுளரண்புரந் தீயிட்டதானியாகா, வெற்றிகொ ளிராகவன் றேவிசிறை போக்கடகம் விறல்லவாவணிசுகம், மேவிடுங்கன்னி யிரணியன் மாண்டதாகாது மேன்மையுண் டைப்பசிக்கே உத்தமங்கார்த்திகைக் காகாது மார்கழியி லோங்கு பாரதம்வந்தநாள், உயர்வுண்டு மகரத்தின் மாசிமாதத்தில் விடமும்பர்கோ னுண்டதாகா, தத்தநீமாரனை யெரித்தபங்குனிதானு மாகுமோவருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௭

விருந்துவாரம்.

செங்கதிர்க்குறவுபோம் பகைவரும் விருந்தொருவர் செய்யொணாதுண்ணொணாது, திங்களுக்குரவுண்டு நன்மையாம் பகைவருஞ் செவ்வாய் விருந்தருந்தார் பொங்குபுதனன்மையுண் டுறவாம்விருந்துணப் பொன்னவற்கதிகபகையாம், புகரவற்காகிலோ நெடுநாள் விரோதமாய்ப் போனவுரவுந் திரும்பும், மங்குமிகர்சனிவார நல்லதாமிதனினு மனமொத் திருந்தவிடமே, வாலாயமாய்ப்போய் விருந்துண விருந்துதவ வாய்த்தநா ளென்றறியலாம், அங்கையில் விளங்கிவளர் துங்கமழுவாளனே யண்ணலேயருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௮

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவணற்சோமனுக் கானகற்புடையளாவள், அங்காரகற்கு வெகு துக்கியாவாள் புந்தி யளவில்லைபைங் குழவி பெறுவாள், திருத்தகு வியாழத்தின் மிக்கசம்பத்தினொடு சிறுவரைப்பெற்றெடுப்பாள், சீருடைய பார்க்கவற் கதிபோகவதியுமாந் திருவுமுண்டாயிருப்பாள், கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண்டலைகுவாள் காரியவாரத்திலாகில், களபமுலைமடமாதர் புஷ்பவதியாம் வார காலபலனென் றுரைசெய்வார், அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே யண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௯

பூப்புலக்னம்.

வறுமை தப்பாதுவரு மேடத்தி லிடபத்தின் மாறாது விபசாரியாம், வாழ்வுண்டு போகமுண் டாகுமிதுனங் கடகம் வலிதினிற்பிறரையணைவாள், சிறுமைசெயு மிடிசேர்வள் மிருகேந்திரற்கெனிற் சீர்பெறுவள் கன்னியென்னில், செட்டுடைய துலையெனிற் பிணியான் மெலிந்திடுவ டேளினுக்குத்தனுவெனில், நெறிசிதைவள் பூருவத்த பரநெறியுடையவளா நீண்மகர மானமிவளாம், நிறைபோக வதிகும்ப மெனின்மீனமென்னிலோ நெறியபேரறிவுடையளாம், அறிவாளர் மடமாதர் சமையமறியிராசிபல னதுவென்ப ரருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௱

தீவுங்கடலும்.

நாவலந்தீவினைச்சூழ்ந்தருங்கடலளவு லட்சம்யோசனையிதனையே, நாடொறுஞ்சூழ்வதில வந்தீவதைச்சூழ்ந்த னற்கழைச்சாற்றின்கடல், மேவுமிதுசூழ்வது குசத்தீவதைச்சூழ்தன் மிருமதுக்கடலதனையே, விழைவொடுஞ்சூழ்தல்கிரவுஞ்சதீவமிதனின் மேற்சூழ்தநெய்க்கடலதாம், பூவிலிதுசூழ்தல்சாகத்தீவமிங்கிதைப் போர்ப்பதுதிருப்பாற்கடல், போதவதுசூழ்தல்சான்மலிதீவமாந்தயிற்புணரியப்பாலு மப்பால், ஆவலூறு புட்கரத் தீவமிதைச்சூழ்வ தரியபுன லருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. எக

மேலானபொருள்கள்.

சுழிசுத்தமாயிருந் ததிலும்படைக்கான துரகமோர் மாணிக்கமாம், சூழ்புவிக்கரசனு யதிலேவிவேகமுள துரையுமோர்மாணிக்கமாம், பழுதற்றவதிரூப வதியுமாய்க்கற்புடைய பாவையோர்மாணிக்கமாம், பலகலைகள்கற்றறிய யடக்கமுளபாவலன் பார்க்கிலோர்மாணிக்கமாம், ஒழிவற்றசெல்வனு யதிலேதியாகியா முசிதனோர்மாணிக்கமாம், உத்தமகுலத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞான முடையனோர் மாணிக்கமாம், அழிவற்றவேதாகமத்தின்வடிவாய்விளங் கமலனை யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. எஉ

உண்டியிலையும் முறையும்.

வாழையிலைபுன்னைபுர சுடனற்குருக்கத்தி மாப்பலாத்தெங்குபன்னீர், மாசிலமுதுண்ணலா முண்ணுதவோவரசு வனசஞ்செழும்பாடலாம், தாழையிலைவத்தியா லேரண்டபத்திரஞ் சகஃதவ முண்முருக்குச், சாருமிவை யன்றிவெண் பாலெருக்கிச்சிலி தனினுமுண்டிடவொணுதாம், தாழ்விலாசிற்றுண்டி நீரடிக்கடிபருகல் சாதங்கள்பலவருந்தல், சற்றுண்டன்மெத்தவூ ணித்தனையுமெய்ப்பிணிதனக்கிடமெனப்பருகிடார், ஆழிபுடைசூழுலகில் வேளாளர் குலதிலக னுகுமெம தருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, எங

கவிஞர்வறுமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச் சேஷனென்றும், ஈவதில்லாதகன லோபியைச்சபைதனி லிணையிலாக்கர்னனென்றும், அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவமாரனென்றும், ஆயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமிகுவிஜயனென்றும், முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சகனை மொழியரிச்சந்திரனென்றும், முதுலகிலிவ்வணஞ் சொல்லியேகவிராஜர் முறையின்றியேற்பதென்னோ, அழலெனவுதித்தவரு விடமுண்டகண்டனை யமலனையருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. எச

கவிஞன்.

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தசுவைத் தேன்மடை திறந்த தெனவே, செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நற்பொருளறிந்துரைசெய் திறமை யுடனே, விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம் விரிவிலக் கணவி கற்பம், வேறுமுள தொன்னூல் வழக்கமூல கத்தியல்பு மிக்கப்ர பந்த வண்மை, உள்ளமெல் லாமறிந் தலைகளுடன் குங்கடலை யொத்ததிக சபைகண் டபோ், ஓங்கலை யொலிக்கிலுறு கடல்போற்ப்ர சங்கம துரைப்பவன்கவிஞ னாகும், அள்ளிவிஷமுண்டகனி வாயனே நேயனே யமலனே யருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதே வனே, ...

நற்சார்பு.

காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே கண்ணிணைகள் செய்புண்ணியம், கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்பதிரு காதுசெய் திடுபுண்ணியம், பேணியவர்புகழையே துதிசெயலபித்திடுதல் பேசில்வாய்செய்புண்ணியம், பிழையாமலவர்தமைத் தொழுதிடலபிப்பதுகை பெரிதுசெய் திடுபுண்ணியம், வீணெறி செலாமலவர்பணிவிடை லபிப்பதுன் மேனிசெய் திடுபுண் ணியம், விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே மிக்கபூ ருவபுண்ணியம், ஆணவ மெனுங்களை களைந்தறி வினைத்தந்த வண்ணலே யருமை மதவேள், அனு தினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதே வனே. ...

பிறந்த நாளோடுவருகிற வாரபலம்.

சென்மநட் சத்திரத் தாதிவா ரம்வரிற் றீரா தலைச்சலுண்டாம், திங்களுக் காகில்வெகு சுகபோச னத்தினொடுதிருமாதி னருளுமுண்டாம், வன்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும் வாராதசுகமதென்பார், மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும் வாரத்துடன்கூடினால், நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை நன்மையுடனேவந் திடும், நாரிய ருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி நல்லவா ரத்தில் வந்தால், அன்மருவு பீடையுண் டாமென்பர் சனியனுக் கமலனே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதே வனே, ...

இதனையுடையவர்க்கு இதுவில்லையெனல்.

பொன்னாசை யுள்ளவர்க் குறவேது குருவேது பொங்குபசி யுள்ள பேர்க்குப், போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு பொதுமாதர் விழிவலையிலே, எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமேதென்றென்று முறுகல் விமேல், இச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது வெளிதா யிருந்து கொண்டே, பன்னாளு மலைபவர்க் கிகழேது புகழேது பாரிலொரு வர்க்க திகமே, பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற் பகர்விரய மொன்று ளதுகாண், அன்னை வருகரி யுரித்தணியு மெய்யனே யமலனே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதே வனே. ...

மழைநாட்குறிப்பு.

சித்திரைத்திங்கள்பதின் மூன்றுக்குமேனல்ல சீரணணிபரம ழையும், நீதில்வைகாசியிற் பூரணைகழித்தபின் சேருநாலாறுளில்னி, க்குவருமழையுமவ வாணியிற் றேய்பிறையி லோங்குமேகாதசியி ல்டிஞளிர்பரிகிவிழ்பொழுதின் மந்தாரமும்மழையு முண்டாயிருந் ள்யில், பத்திவருதேதியைந் திணிலாதிவாரமும் பகருமரவணிமூல மு, பரிதியுமறைந்திடக் கனமழைமொழிந்திடப் பாரில்வெகுவிளை ண்டாம்,, அத்தவேவைபைங்குவளை மாலையணிமார்பனு மண்ணலேய மைமதவேள், அனுதினமுமன தினினை தருசதுரகிரிவள ரறப்பளீ ரதேவனே. ௭௯

இருந்துமுதவாமை.

சமயத்திலுதவாத நிதியமென்மிக்கதுயர் சார்பொழுதிலாதகி யேன். சபைமுகத்துதவாத கல்வியேனெதிரிவரு சமரத்திலாதப டையேன், விமலைலுக்குதவாத பூசையேனுளமிருள் வேளைக்கிலாதசு ரேன், வெம்பசிக்குதவாத வன்னமேளிடுகுளிர் வேளைக்கிலாதகலை யேன், தமதுகளர்வேளைக் கிலாதவோர்மனைவியேன் சரசத்திலாதந கையேன், சாமரணகாலத்தி லுதவாதபுதல்வனென் றரணிமீதென்ப ர்கண்டாய், அமரர்க்குமுனிவர்க்கு மொருவர்க்குமெட்டாத வாதியே ருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்ப ளீசுரதேவனே. ௮௰

மறையோர்சிறப்பு.

ஆராறுந்தொழிலையுங் கைவிடார்சௌசவிதியொன்றுதப்பாதுபுரி வார், உதயாதியிற்சென்று நீர்படிகுவார்கால மொருமூன்றினுக்கும றவா, தாராய்ந்துகாயத்ரி யதுசெபிப்பார்நாளு மதிதிபூசைகள் பண் ணுவார், யாகாதிகருமங்கள் மந்த்ரகிரியாலோப மின்னியேசெய்துவ ருவார், பேராசைகொண்டிடார் வைதிகநன்மார்க்கமே பிழையாதிரு க்குமறையோர், பெய்யெனப்பெய்யுமுகி லவர்மகிமை யெவர்களும் பேசுதற்கரிதரிதுகாண், ஆரார்நெடுஞ்சடில வமலனேயெனையாளு ம ண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவ ள ரறப்பளீசுரதேவனே. ௮௧

அரசர்சிறப்பு.

மநுநீதிமுறைமையும் பரராசர்கொண்டாட வருமதிகரணவீர மும், வான்விஜயமொடுசரச சாதனவிசேஷமும் வாசிமதகரியேற்றமு ம், களமாமமைச்சரும் பலயான துர்க்கமும் கைகண்டபோர்ப்படை ஞரும், கஜரதபதாதியுந் துரகப்ரவாகமுங் காலதேசங்களைவையும், இனிதாயறிந்ததா னுபதிகளொடுசமர்க் கிளையாத தளகர்த்தரும், என்றும்வற்றாததன தானியசமுத்திரமு மேற்றமுள குடிவர்க்கமும், அனேவோருமெச்சவிங் கிவையெலாமுடையபே ராசராமருமைமத வேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவ னே. ௮௨

வைசியர்சிறப்பு.

நீள்கடல்கடந்திடுவர் மலையாளமும்போவர் நெடிதூரந்திரிந்து, நினைவுதடுமாறுர்கள் சலியார்கள்பொருள்சேதம் நேரிலத்தாபுரியும், வாளுழவரைத்தமது கைவசஞ்செய்வார்கள் வருமிடம்வராவிடமும், மனதையுமறிந்து தவியொன்று நூறுயிட வளர்ப்பவருது லைக்கும், அள்ளிடுவர்மலிவுகுறைவதுவிசாரித்திடுவ ரளவில்பற்பசரக்கும, அமைவுறக்கொள்வர்விற் பார்கணக்கதிலணுவு மறவிடாசெலவுவரியோர, அளியொத்தேமலையி னளவுங்கொடுத்திடுவ ரருவசியாருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரப்பளீசுரதேவனே.

அ

வேளாளர்சிறப்பு.

யசனுதிகருமமுந் தப்பாமல்வேதிய ரியற்றிநல்லோர் பெறுவதும், இராச்யபாரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண் டென்றுநற்பேர்பெறுவதும், வசனுதித்பாது தனதா னியந்தேடி வசியாநல்லோர்பெறுவதும், மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக வளமைபெற்றேர் பெறுவதும், திசைதோறு முள்ளபல தேவா லயம்பூசை செய்யனல் லோர்பெறுவதும், சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர் செய்யுமே ழிப்பெருமைகாண், அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற வண்ணலே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதே வனே. அ

தானுதிபதி மந்திரசேனுதிபதிகளி னியல்பு.

தன்னரசர் வலிமையும் பரராச ரெண்ணமுஞ் சாலமேல் வருகருமமும், தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினேன் றுனுதி பதியாகுவான், மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும் வாழ்குடி படைத்தி றமையும், மந்திராலோசனையு மெல்லா மறிந்தவன் வளமான மதிமந்திரி, துன்னிய படைக்குணங் கரிபரி பரிசையுமே சூழ்பகைவர் புரிசூழ்ச் சியும், தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள்சூரனே சேனு திபன், அன்னையிலு நல்லமலை மங்கைபங்காளனே யனகனே யருமை மதவேள். அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதே வனே.

அ

இராயச கருணீகர்சிறப்பு.

வருமோலை யுத்தரத் தெழுதிவரு பொருளினல் வரவிடுப் போன்மனதையும், மருவிவரு கருமமுந் தேசகாலத்தையும் வருகரதலாமலகமா, விரைவா யறிந்தரச ரெண்ணிலெண் ணினையள விடாவெழுத வாசிக்கவும், வெற்றிகொண்டேபெரிய புத்தியுடை யோன்புவியின் மேன்மைரா யசகாரனும், கருவா யறிந்துதொகை யீராறுநொடியினிற் கடிதேற் றிடக்கு றைக்கக், கடுகையொரு மலையாக்க மலையையொரு கடுகுமாக் காட்டுவோன் கருணீ கனும், அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு மண்ணலே யருமை மதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. ()

கோபத்தின் கொடுமை.

கோபமேபாவங்களுக்கெல்லாந்தாய்தந்தை கோபமேகுடிகெடுக்கும், கோபமேயொன்றையுங் கூடிவரவொட்டாது கோபமேதுயர்கொடுக்கும், கோபமேபொல்லாது கோபமேசீர்கேடு கோபமேயுறவறுக்கும் கோபமேபழிசெயுங் கோபமேபகையாளி கோபமேகருணைபோக்கும், கோபமேயீனமாங் கோபமேயெவரையுங் கூடாமலொருவனாக்கும், கோபமேபாவிமுன்கொண்டுபோய்த்தீயநரகக்குழியினிற்றள்ளுமாம், ஆபத்தெலாந்தவிர்த்தென்னையாட் கொண்டருளு மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௭)

பல் துறை.

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழ்வோர் தங்களுக்கவைகழுவுறு, சற்றுமறிவில்லாமலந்தணரைநிந்தனைசெய்தயவிலோராயுள்பெருகார், மென்படுநறுங்கலவைமாலைதயிர் பால்புலால் விடுநற்செந்நெலிவைகள், வேறொருவர்தந்திடினு மநுமொழியறிந்தபேர் விலைகொடுத்தேகொள்ளுவார், தேன்கனிகிழங்குவிறகிலையிவை யனைத்தையுந்தீண்டரிய நீசரெனினுமட, சீர்பெறவளிப்பரேலிகழாதுகைக்கொள்வர் சீலமுடையோரென்பரால், ஆன்கொடியுயர்த்தவுமைநேசனேயீசனே யண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௮)

தத்துவத்திரயம்.

பூதமோரைந்துடன் புலனைந்துஞானம் பொருந்துமிந்திரியமைந்து, பொருவிலாகன்மேந்திரிய மைந்துமனமாதியாம் புகலரியகரணநான்கே, ஓதிமேலிவையாத்மதத்துவமெனச்சொல்வருயர்காலநியதிகலையோ, டோங்கிவருவித்தைராகம்புருடன் மாயையென்றுணைசெய்யுமோரேழுமே, தீதில்வித்யாதத்வமென்றிடுவரிவைபலாய்நிகழ்சுத்தவித்தையீசன், சீர்கொள்சாதாக்கியஞ்சத்திசிவமைந்துமே சிவதத்வமென்றறைகுவார், ஆதிவடநீழலிற் சனகாதியர்க்கருள்செ யண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௯)

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியவும்.

வனசஞ்செழுஞ்சூதமுடனசோகந்தவளமலர்நீலமிவையைந்துமே, மாரவேள்கணைகளாமிவைசெயுங்குணமுளாமனதிலாசையையெழுப்பும், வனவிலொண் சூதமலர் மெய்ப்பசலையுண்டாக்கு மிகவசோகந்துயர்செயும், வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடுமேவுமிவை செயுமவத்தை, நினைவிலதுவே நோக்கம் வேறொன்றி

லாசையற நெட்டுயிர்ப் பொடுபிதற்றல், நெஞ்சந்திடுக்கிடுதநலம்வெ றுத திடல்காய்ச்ச னோர்தன்மௌ னம்புரிகுதல், அணையவுயிருண்டி ல்லையென்னலீ ரைந்துயா மத்தனே யருமைமதவேள், அனுதினமு மனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூ0)

மன்மதனுபகரணங்கள்

வெஞ்சிலை செழுங்கழைவிஞரிகரு வண்டினமேல் விடுங்கணைக ளலராம், வீசிடுந் தென்றல்தேர் பைங்கிள்ளையே பரிகள் வேழங்கொ டாதவிருளாம், வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணெடிய வண்மைபெரு கடன்முரசமாம், மகரம்ப தாகைவரு கோகிலங்காக ளம் மனதேபெரும்போர்க்களம், சஞ்சரிகை விசைபாடல் குமுதநே யன்கவிகை சாரிரதியே மனைவியாம், தறுகண்டமட்டமாத ரிளமுலைம குடமாமல்கு றவருதிருக்கு மிடமாம், அஞ்சுகணைமாரவேட் கென்ப ரெளியோர்க்கெலா மமுதமே யருமைமதவேள், அனுதினமு மனதி னினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூக)

பகைகொள்ளத் தகாதவர்.

மன்னவரமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு மாறாத மர்ம முடையோர், வலுவர்கருணீகர்மிகு பாகஞ்செய்தன்னமிடு மடையர் மந்திரவாதியர், சொர்னமுடையோர் புலையருபதேச மதுசெய்வோர் சூழ்வயித்தியர்கவிதைகள், சொற்றிடும்புலவரிவர் பதினைந்துபேரொ டுஞ் சொற்பனந்தனி லாகிலும், நன்னெறியறிந்தபேர் பகைசெய்தி டார்களிந்நானிலத் தென்பர்கண்டாய், நாரியோர்பாகனே வேதாக மம்பரவ நம்பனேயன்பர்நிதியே, அன்னமூர்பிரமனுங்கண்ணனுங்கா ணுதவண்ணமலையருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூஉ)

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன.

சுவைசேர்கரும்பைவெண் பாலைப்பருத்தியைச்சொல்லுநன்னெ ல்லையெள்ளைத், தூயதெங்கின்கனியையெண்ணுததுட்டரைத்தொண் டரைத் தொழுதொழும்பை, நவைதீருமாறுகண்டித்தே பயன்கொள் வர் நற்றமிழ்க்கவிவாணரை, நலமிக்கசெழுவலரை யோவியமெனத்த க்க நயமுள்ளநாரியர்தமைப், புவிமீதினுபகாரநெஞ்சரைச்சிறுவரைப் போர்வீரரைத்தூதரைப், போதவும்பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன் புகழ்பெறக் கொள்வர்கண்டாய், அவமதி தவிர்த்தென்னை யாட்கொ ண்ட வள்ளலே யண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூங)

தருமம்.

பெருமில் பெறுவித்தலொடு நாளோலைநாடொறும் பிள்ளைவளா ருந்திடும்பால், பேசரியதத்திரமட மாவுரிஞ்சுகல்பெண்போகநாவிதா

வனான், மறைமொழிகண்ணாடி தண்ணீர்தலைக்கெண்ணெய் பசுவா
லுறைபிணமடக்கல், வாயிலுறமுயிர்மீட்ட றின்பொருளடைக்காய்
பழக்கல்சுண்ணாம்புதவுதல், சிறைபுறுபவர்க்கமுது வெற்றிலைக்காத்
தல்பொழில் செய்தன்முன் னூலின்மணந், திகழ்விலங்கூண்பிச்சை
பறுசமயருக்குண்டி தேவராலயமவுஷதம், அறைதல்கற்போர்க்கன்ன
ாலெட்டறங்களுமு னன்னைசெய லருமைமதவேள், அனுதினமும
னதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௧௪

இல்லறம்.

தந்தைதாய்சற்குருவையிட்ட தெய்வங்களைச்சன்மார்க்க முளம
னைவியைத்,தவறாதசுற்றத்தை பேவாதமக்களைத்தனைநம்பி வருவோர்
களைச், சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய்வோர்களைத் தென்பு
லத்தோர்வறிஞரைத், தீதிலாவதிதியைப் பரிவுடையதுணைவரைத்
தேனுவைப்பூசுரர்தமைச், சந்ததஞ்செய்கடனை பொன்றுமிவைபி
ழையாது தான்புரிந்திடலில்லறம். சாருநலமுடையராந் துறவறத்
தோருமிவர் தம்முடன்சரியாயிடார், அந்தரியுயிர்க்கெலாந் தாய்தனி
னுநல்லவட் கன்பனே யருமைமதவேள், அனுதினமுமனதினினை த
ருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௧௫

புராணம்.

தலைமைசேர்பௌடிக மிலிங்கமார்க்கண்டமெழில் சாரும்வா
மனமச்சமே, சைவம்பெருங்கூர்மம் வரும்வராகங்காந்தசரிதமே, ப்ர
ம்மாண்டமும், நிலைமைசேர்ப்பத்துமுயர் சிவபுராணமாநெடியமால்
கதைவைணவம், நீதிசேர்காருடநாரதம் பாகவதநீடிபபுராணநான்கா
ம், கலைவலர்சொல்பதுமமொடுபிரமகைவத்தமே கமலாலயன்காதை
யாம், கதிரவன்காதையே சூரியபுராணமாங் கனல்காதையாக்கினே
யம், அலைகொண்டநதியும்வெண் மதியுமறுகுப்புனையு மத்தனேயரு
மைமமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ
சுரதேவனே. (௧௬)

புகழ்ச்சி.

பருகாதவமுதொருவர்பண்ணாதபூஷணம்பாரின் மறையாதநிதி
யும், பாதிகண்டலராத நிலவுகண்டுலரா த பண்புடைய பங்கேருகங்,
கருகாதபுயல்கலைகளருகாததிங்கள்வெங்கானிலுறையாதசீயங்.கருத
ரியவிக்குணமனைத்து முண்டானபேர் காசினியிலருமையாகும், தெரி
யவுரைசெய்யின்மொழிகீர்த்திவரு கல்வியொடுசீரிதய மீகைவதனம்,
திடமானவீரமிவையென்றறிகுவார்களிச் செகமெலாங் கொண்டாட
வே, அருள்கற்பதருவென்ன வோங்கிடுந்தானதுரையாகு மெமதரு
மைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ
சுரதேவனே. ௧௭

திருமாலவதாரம்.

சோமுகாசுரனைமுன் வதைத்தமரர்துயர்கெடச் சுருதிதந்ததுமச்சமாம், சுரர் தமக்கமுதீந்த தாமையாம் பாய்போற்சுருட்டிமா நிலமெடுத்தே, போமிரணியாக்கதனை யுயிருண்டேதனமாம் பொல்லாதகனகனுயிரைப், போக்கியதுநரசிங்க முலகளந்தோங்கியது புனிதவாமனமூர்த்தியாம், எமுறுமிராவணனை வென்றவனிராகவ னிரவிகுலம் வேரறுத்தோன், ஏர்பரசிராமன்வரு கண்ணனொடுபலராம னிப்புவிபயந்தவிர்த்தோர், ஆமினியகற்கியினி மேல்வருவதிவைபத்து மரிவடிவ மருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௮)

சிவமூர்த்தி.

பிறைசூடியுமைநேசன் விடையூர்திநடமிடும் பெரியனுயர்வதுவைவடிவன், பிச்சாடனன்காம தகனன்மறலியைவென்ற பெம்மான் புரந்தகித்தோன், மறமலிசலந்தரனை மாய்த்தவன்பிரமன்முடி வௌவினோன்வீரேசுரன், மருவுநரசிங்கத்தை வென்றவரனுமைபாகன் வனசரன்கங்காளனே, விறன்மேவுசண்டேச ரட்சகன்கடுமந்தி மிக்கசக்கரமுதவினோன், விநாயகற்கருள்செய்தோன் குகனுமையுடன்கூடி மிளிரேகபாதன்சுகன், அறிவரியதக்ஷிணாமூர்த்தியொ டிலிங்கமாமையனே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௯)

கவிவணக்கம்.

மலரிதழிணைபங்குவளை மென்முல்லைமல்லிகை மருக்கொழுந்துபர்கூவிளம், மற்றுமுளவாசமலர் பத்திரஞ்சிலசூடி மணிமுடிதனிற்பொருத்தே, சிலர்முழுக்கொடுவனத் துப்பூளைபச்சறுகு செம்முள்ளிமலர்சூடவே, சித்தம்வைத்திடவு மங்கீகரித்திடு மகாதேவதேவா தெரிந்தே, கலைவலருரைக்குநற் கவியொடம்பலவாண கவிராயனுக்குமென்புன், கவிதையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனுதுமடனுகமும், அலைபெருகுகங்கையுஞ் செழுமதியமும்புனையு மமலனே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௱)

அறப்பளீசுரசதகம்.

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் மென்கழல்வாழ்க.